ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
| திகதி | 2021.10.26 |

# பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்கான ஆறு மாத கால வழிகாட்டலில் அறிவிக்கப்பட்டவாறு வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களைப் பெற்றுக்கொள்வதிலான முன்னேற்றம்

இலங்கை மத்திய வங்கி *பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்கான ஆறு மாத கால வழிகாட்டலில்* அறிவிக்கப்பட்டவாறு வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களைப் பெற்றுக்கொள்வதில் இலங்கை மத்திய வங்கியினாலும் அரசாங்கத்தினாலும் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றம் தொடர்பில் முதலீட்டாளர்களுக்கும் பொது மக்களுக்கும் பின்வரும் தகவல்களை வழங்க விரும்புகின்றது.

இலங்கை மத்திய வங்கியும் அரசாங்கமும் ஏனைய அரசாங்கங்கள், மத்திய வங்கிகள், நிதியியல் நிறுவனங்கள் மற்றும் முதலீட்டாளர்களுடன் நேரடி ஈடுபாடுகளின் தொடரொன்றினை ஆரம்பித்துள்ளன.

போதியளவு பயன்படுத்தப்படாத மற்றும்/அல்லது உபாயமல்லாச் சொத்துக்களின் பணமாக்கலினை நோக்கிய முயற்சிகளுடன் இசைந்து செல்லும் அபிவிருத்திச் செயற்றிட்டங்களுடன் தொடர்புடைய பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. சாமர்ஸ் கிரேனரிஸ் மற்றும் *வன் கோல்பேஸின்* பின்புறமுள்ள ஆதனத்துடன் தொடர்புடைய இரண்டு கொடுக்கல் வாங்கல்களினதும் எதிர்பார்க்கப்பட்ட பெறுகைகள் மாத்திரம் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 200 மில்லியனாக விளங்குவதுடன் முற்கொடுப்பனவொன்று விரைவாக எதிர்பார்க்கப்படுகின்றது. முதலீட்டுத் தகவல்கள் எதிர்வரும் வாரங்களில் அறிவிக்கப்படும்.

மேலும், இந்திய அதானி குழுமம், இலங்கையின் இணைத்தரப்பினராக ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் மேற்குக் கொள்கலன் முனையத்தின் ஐ.அ.டொலர் 650 மில்லியன் முதலீடானது அண்மையில் இறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வலுக் கலவையில் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவினை இணைப்பதனூடாக இலங்கையில் வலுத் துறையினை மாற்றமடையச் செய்யக்கூடிய மற்றுமொரு முக்கிய வெளிநாட்டு முதலீடாக ஐக்கிய அமெரிக்காவின் நியூ பொட்ரஸ் எனேர்ஜியின் மேற்குக் கடற்கரை வலு நிலையத்தின் பகுதியளவான கைமாற்றம் செய்தலுடன் தொடர்புடைய ஐ.அ.டொலர் 250 மில்லியன் உட்பாய்ச்சல் காணப்படுவதுடன் முதலீட்டின் முதலாவது தொகுதியானது 2021 நவம்பர்/திசெம்பர் காலப்பகுதியில் எதிர்பார்க்கப்படுகின்றது.

அயல்நாட்டு மத்திய வங்கிகளுடன் வெளிநாட்டு நாணயப் பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடுகளின் இறுதிப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக இந்திய ரிசர்வ் வங்கி, சீன மக்கள் வங்கி மற்றும் பல்வேறு மத்திய கிழக்கு மத்திய வங்கிகளுடனான கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன.

அதேவேளை, அரசாங்கம் வெளிநாட்டு அரசாங்கம் சார்பான முகவரொன்றிடமிருந்து ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் பெறுமதியான நீண்ட காலக் கடன் வழங்கலொன்றினைச் செயற்படுத்திக்கொண்டிருக்கின்றது. அரசாங்கத்தின் கூட்டுக்கடன் ஏற்பாடுகளின் முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள்களுக்குப் பதிலிறுத்திப் பல்வேறு முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அவை தற்போது தொழிற்படுத்தப்பட்டு வருகின்றன.

ஏனையவற்றிற்கிடையே அண்மைக் காலங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைக் காண்பித்துள்ள துறைகள்:

அ) 2021 ஒத்தோபர் மாத காலப்பகுதியில் ஏற்றுமதிப் பெறுகைகளின் மீளனுப்பல்களில் குறிப்பிடத்தக்க மேம்பாட்டுடன் 2021 யூன்-செத்தெம்பர் மாத காலப்பகுதியில் மாதாந்த வருவாய்களின் ஐ.அ.டொலர் 1 பில்லியனை விஞ்சிக்காணப்பட்ட ஏற்றுமதிகள்

ஆ) குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளிற்கான தொழிலாளர் புலம்பெயர்வில் துரித அதிகரிப்பு

இ) சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் குறிப்பிடத்தக்க மாதத்திற்கு மாத அடிப்படையிலான அதிகரிப்பொன்றுடன் சுற்றுலாத்துறையில் மீட்புச் செயன்முறையின் தொடர்ச்சி, மற்றும்

ஈ) மத்திய கிழக்கு மற்றும் ஏனைய பிராந்திய பொருளாதாரங்களிலிருந்தான பெற்றோலியத்துடன் இணைந்த கொடுகடன் தொடர்பில் முன்னெடுக்கப்படுகின்ற பேச்சுவார்த்தைகள். இவை ஐ.அ.டொலர் 500 மில்லியன் பெறுமதியான இந்திய கொடுகடனொன்றினையும் பேச்சுவார்த்தையின் கீழுள்ள ஐ.அ.டொலர் 3.6 பில்லியன் கொண்ட நீண்ட காலக் கொடுகடன் வசதியொன்றினையும் உள்ளடக்கியுள்ளன.

உள்நாட்டுச் சந்தையில், அரச பிணையங்கள் மீதான விளைவுகள் மேல்நோக்கிச் சீராக்குவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதனூடாக அரசாங்கத்தின் நிதியிடல் தேவைப்பாட்டிற்கு நிதியளிப்பது தொடர்பில் மத்திய வங்கியின் மீதான அழுத்தங்கள் தளர்த்தப்பட்டுள்ளன. வாராந்த ஏலங்களில் முதலீட்டாளர்களின் நடத்தையானது சந்தைச் சமநிலை பெருமளவு அடையப்பட்டிருப்பதனையும் எதிர்வரும் காலப்பகுதியில் வட்டி வீதங்களில் பெருமளவான உறுதிப்பாடு அவதானிக்கப்படக்கூடும் என்பதனையும் குறிக்கின்றது.

தனியார் துறைக்கான கொடுகடன் பாய்ச்சல்களினாலும் அதேபோன்று பங்குச் சந்தையின் நடத்தையினாலும் சான்றுறுதிப்படுத்தப்பட்டவாறு உண்மைத் துறையில் உள்நாட்டு முதலீடு உயர்வடைந்துள்ளது. அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் வரலாற்றிலேயே முதற்தடவையாக 10,000இனை விஞ்சிக்காணப்பட்டது. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியாருக்கு வழங்கப்பட்ட கொடுகடனின் அதிகரிப்பு 2021 ஓகத்து மாதத்தில் முடிவடையும் எட்டு மாத காலப்பகுதியில் ரூ. 625 பில்லியனாகவிருந்தது. இவ்வபிவிருத்திகளும் பொருளாதார வளர்ச்சியானது 2021இல் 5 சதவீதத்திற்கு மிகவும் அருகில் இருக்கக்கூடுமென்பதனைக் குறித்துக்காட்டுகின்றன.